மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்த வியாபாரமாக இருந்தாலும் சில்லறை வியாபாரமாக இருந்தாலும் எல்லாவற்றுக்கும் சட்டம் ஒன்றுதான்.

திரு. கே. என். குமாரசாமி : கள்ளுக்கடை, சாராயக் கடைகளை ஏலம் விடும்போது இன்ன இடத்தில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னாலும் அதை அவர்கள் மீறி கடைகள் வைக்கிறபோது அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : குறிப்பிட்ட இடம் என்று வைத்து ஏலம் விடுவதில்லை. குறிப்பிட்ட ஏரியாவுக்காக ஏலம் விடுகிறோம். விதிகளை மீறினால் சட்டப்படி அவர்கள் உரிமத்தை ரத்து செய்ய முடியும்.

* 211 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(*a*) whether it is a fact that the Collector of Madurai has ordered an enquiry into the location of wine shops at the place where Gandhiji stayed at Madurai City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) 1921 செப்டம்பரில் காந்தியடிகள் தான் அதுவரை வழக்கமாக அணிந்து வந்த முழு ஆடைகளை விடுத்து அரை உடை அணியத் தொடங்கிய கட்டிடத்தில் மதுக்கடை திறப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற புகார் வரப்பெற்றதன் மேல், அதுபற்றி விசாரணை செய்யும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டார். மதுக்கடை அமைப்பதற்கு உரிமம் வழங்கப்பட்டுள்ள இடம், மதுரை, மேற்கு மாசிவீதி 251 ஆம் எண் கட்டிடமாகும். இந்த இடத்தில் காந்தியடிகள் தங்கவில்லை என்றும் மதுரை, மேற்கு மாசிவீதி 251 A ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில்தான் அவர் தங்கினார் என்றும் அந்த இடத்தை கதர் விற்பனை நிலையம் அமைப்பதற்காக தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தினால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளது என்றும் விசாரணையிலிருந்து தெரியவந்தது.

THIRU N. DENNIS : Will the Government ban opening of liquor shops in all places which people venerate?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே பதில் சொல்லும்போது விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

1973 மார்ச் 2]

திரு. நா. வீராசாமி: இந்த அரசாங்கத்தின்மீது தவறு சொல்ல வேண்டுமென்று இதுபோன்ற பொய்யான தகவல்களைக் கூறுகின்றார்கள். கலெக்டர் இதனை விசாரித்து இந்தத் தகவல் சரியல்ல என்றவுடன், இதுபோன்ற பொய்யான தகவல் கொடுத்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முயற்சிப் பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட தகவல் பத்திரிகையில் தான் வந்திருக்கிறது. அந்தப் பத்திரிகைகளைப்பற்றி மக்கள் புரிந்துகொண்டால் அதுவே சரியாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: காந்திஜி தங்கிய வீட்டின் அருகாமையில் இந்தக் கடை அமைந்திருப்பதாக இப்போது தகவல் சொல்கிறார்கள். அந்தப் பகுதியிலேயே இல்லாமல் வேறு பகுதிக்கு மாற்ற ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் முன்பே சொன்னேன். அந்த வீட்டிற்கும், இந்த வீட்டிற்கும் சம்பந்தம் இல்லை. தனித்தனி வாசல், தனித் தனி கதவு. நிச்சயமாக காந்திஜி தங்கிய இடத்தில் கள்ளுக்கடை வைக்க இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது, அனுமதிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புலியூர்-மணப்பாரை சாலை

* 212 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பளிப்பாரா— மு.ப 9-30

(அ) புலியூர்-மணப்பாரை சாலையில் லிங்கத்தூர் அருகில் வடிகால் வாய்க்கால் செல்லுவதால் மழை காலங்களில் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்து வருவது உண்மையா ?

(இ) இந்த இடத்தில் பாலம் கட்டவேண்டும் என கோரிக்கை எப்போது வந்தது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருச்சிராப்பள்ளி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் முன் வந்தது.